For Private Circulation Only

ECHOES INDIA

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

மார்ச் 2014

மலர் 7, இதழ் 2



# பூஜ்ய லாலாஜி மகராஜின் 141-வது பிறந்த நாள் விழா 1-4 பிப்ரவரி 2014

## மணப்பாக்கம்

மாஸ்டர் 2-ஆம் தேதி காலை 7.30 மணிக்கு சத்சங்கம் நடத்தினார். அவர் சக்கர நாற்காலியில் ஹாலுக்குள் நுழையும்போது, சுமார் 4000 அப்யாசிகளின் கைதட்டல் தானாக எழுந்தது. 1 மணி 5 நிமிடங்கள் நடந்த சத்சங்கத்திற்குப் பின் மாஸ்டர், 'இங்கே இப்போழுதே' என்பதை மையக் கருத்தாகக் கொண்டு உரையாற்றினார். நேரம் குறைவாக இருப்பதால் அப்யாசிகள் நேரத்தை வீணாக்காமல் தினசரி பயிற்சியில் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார். சகஜ மார்க்கத்தின் மூலம், எந்த ஒரு மனிதனும், ஆயிரக்கணக்கான வருடங்கள் முயற்சித்து பெற வேண்டிய முக்தியை, ஒரு வாழ்நாளி லேயே அடையமுடியுமென்று கூறினார்.

மாலையில், சத்சங்கத்திற்குப்பின், சென்னையைச் சேர்ந்த இளம் அப்யாசிகளின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. வசந்த பஞ்சமி தினமான 4-ஆம் தேதி, அன்று, காலை 7:30 மணிக்கு மாஸ்டர் சத்சங்கம் நடத்தினார். அதற்குப் பின்னர், சகோ.மாதுரி கிருஷ்ணா, "விஸ்பர்ஸ்"-லிருந்து ஒரு செய்தியை வாசித்தார். அதைத்தொடர்ந்து, சகோ. P.R. கிருஷ்ணா, மாஸ்டரின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான சில நிகழ்வுகளைப் பற்றிப் பேசினார். 1964 ம் வருடம் வசந்த பஞ்சமி அன்று மிஷனில் சேர்ந்து, இந்த வருடத்துடன், ஒரு அப்யாசியாக ஐம்பது வருடங்கள் மாஸ்டர் நிறைவு செய்திருக்கிறார். இந்த உரைக்குப் பின், கேக் ஒன்றை மாஸ்டர் வெட்டினார். மாஸ்டர் ஹாலை விட்டு வெளியேறும்போது ஒரு ரஷ்ய தம்பதி, தங்கள் திருமணத்தை நடத்தி ஆசீர்வதிக்கக் கோரிய போது அவர் சம்மதித்தார். பின்னர் அவர் தற்காலிகமாக செயல் படவுள்ள கேண்டீனைத் திறக்கச் சென்றார். ஹாலில் சகோ.குர்ப்ரீத் சரண், சில பஜன்களை பாடினார். விழாவினைப் பூர்த்தி செய்யும் விதமாக, மாலை 6:30 மணிக்கு சகோ. ஜெயந்தி வீணை வாசிக்க சகோதரர்கள் கணேஷ் மற்றும் குமரன் பாடினர்.














## திருப்பூர் 1 - 4 பிப்ரவரி 2014

நீண்ட காலத்திற்குப் பிறகு லாலாஜி மகராஜின் பிறந்த நாள் ஆண்டு விழா சர்வதேச விழாவாகக் கொண்டாடப்பட்டது. நான்கு நாள் விழாவானது பிப்ரவரி 1ம் தேதியிலிருந்து சந்திரமான வசந்த பஞ்சமியான 4ம் தேதி வரை நடைபெற்றது. அப்யாசிகள் விழாவிற்கு முன் ஏற்பாடுகள் செய்வதிலிருந்து விழாவை நடத்துவதிலும், முடித்து வைப்பதிலும் கூட உதவினர். விழா அமைப்பும், நிர்வாகமும், திருப்பூரிலிருந்து நாம் எதிர்பார்க்கும் வகையில் உயர்தரமாக இருந்தன. 2ம் தேதிக்குள் அப்யாசிகளின் எண்ணிக்கை 16,500ஆக உயர்ந்தது. அதில் 1500 தொண்டூழியர்களும், 1729 சிறுவர்களும் இருந்தனர்.

தினமும் காலை 6.30, 11.00 மற்றும் மாலை 5.00 மணி என மூன்று சத்சங்கங்கள் நடைபெற்றன. சகோ.கம்லேஷ் சத்சங்கங்களுக்குப் பிறகு ஐந்து உரைகளை ஆற்றியதுடன் ப்ரிபெக்டுகளுக்கு தனியாக ஒரு உரையையும் வழங்கினார்.அவரது உரைகள், அப்யாசிகள் தியானத்தில் ஆழமாகச் செல்லவும், அவர்களது அறிந்து கொள்ளும் திறனை மேம்படுத்தவும், முக்கியமான விஷயத்தில் மனம் குவிக்கவும் உதவின.

மாஸ்டர் விழாவில் பங்கேற்க முடியாத போதிலும் அவரது ஆன்மீகப் பிரசன்னத்தை ஒவ்வொரு நிலையிலும் உணர முடிந்தது. 2ம் தேதி காலை சத்சங்கத்திற்குப் பிறகு மாஸ்டருடன் சென்னையிலிருந்து weblink வழியாகத் தொடர்பு கொண்ட போது அவர், குழுமியிருந்தோருக்கு ஒரு உரை ஆற்றினார். விழாவின் செயற்குழுத் தலைவரான சகோ. கம்லேஷ், இடத்தின் நுட்பமான ஆன்மிக அதிர்வுகளுக்குத் தக்கவாறு எல்லோரும் தங்களது நடத்தையை அமைத்துக் கொண்டு ஒரு இயற்கையான ஒழுங்குமுறையை ஏற்படுத்துமாறு ஊக்குவித்தார்.

2ம் தேதி காலை 6.45 சத்சங்கத்திற்குப் பிறகு சகோ.கம்லேஷ், நான்கு திருமணங்களை நடத்தியதுடன், 1 பிப்ரவரி 2014 அன்று வந்த 'விஸ்பர்ஸ்' தூதுரையைப் படித்தார்.சில புதிய பிரசுரங்கள் மற்றும் புகைப்படங்கள் வெளியிடப்பட்டதும், சகோ.குர்ப்ரீத் மற்றும் சகோ.பியுஷ் சில பஜன்களை பாடினர்.

சகோ.கம்லேஷ் தனது முதல் உரையில், லாலாஜியின் 'Principles Of Conversation' ஐப் படித்தார். அதில் லாலாஜி, நமது உரையாடலின் முறையானது, சமநிலையான மனது மற்றும் இதயத்தூய்மை, ஒழுக்கம் ஆகியவற்றைப் பிரதிபலிக்க முடியும் என்பதால், அதில் கவனம் செலுத்தும்படி நம்மை வலியுறுத்துகிறார்.

பின்பு தொடர்ந்த பேச்சுகளில், சகோ.கம்லேஷ், விதிக்கப்பட்ட முறையில் ஒழுங்கான பயிற்சி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.அவர், நமது அன்றாட வாழ்வில் நாம் உண்ணும் உணவு, பிறருடன் பழகும் முறை போன்ற செயல்கள், நம்மில் சம்ஸ்காரங்களை உருவாக்குவதைப் பற்றிப் பேசினார். தியானம் முடிந்த பிறகு ஒவ்வொருவரும் தமது உள்நிலையில் ஆழ்ந்து அதனைத் தக்க வைத்துக்கொள்ள முயல வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். 4ம் தேதி வழங்கிய முடிவுரையில் அவர் எல்லோரையும் பாராட்டியதுடன், இவ்வருடம் லாலாஜி மகராஜரால் ஏற்படுத்தப்பட்ட சத்சங்கங்கள் தொடங்கிய நூறாவது ஆண்டாகும் என்று கூறினார். அவர் 2 ம் தேதி, எல்லா ப்ரீபெக்டுகள், மையத் தலைவர்கள், மண்டலத் தலைவர்கள் ஆகியோரை நிரந்தர தியான மண்டபத்தில் சந்தித்துப் பேசியதுடன், 3 பிப்ரவரி அன்று எல்லா தொண்டூழியர்களுக்கும் ஒரு சிறப்பு சத்சங்கம் நடத்தினார்.

விழா அமைப்பாளர்கள் வளாகத்தைச் சுற்றி பல்வேறு தலைப்புகளில் அழகான சுவரொட்டிகளை அமைத்திருந்தனர். தியான மண்டபத்திற்கு வெளியே லாலாஜி மகாராஜரைப் பற்றிய ஒரு பொதுக்காட்சி இருந்தது. உணவகம் மற்றும் சிறுவர் மையத்திற்கெதிரே நற்பண்புகளை உருவாக்கும் நியமங்களைப் பற்றிய உணர்ச்சியூட்டும் காட்சியமைப்பு இருந்தது.காட்டேஜுக்கு அருகேயான இடம் 'நிசப்தமான வட்டாரமாக' வரையறுக்கப்பட்டிருந்தது. அவ்விடத்தை அமைதியாக, இதய பூர்வமான சிந்தனையும் தியானமும் செய்ய உபயோகிப்பது எப்படி என்று விளக்கும் விளம்பரத்தட்டிகளை அமைத்திருந்தனர்.

சிறுவர் மையத்தில், சின்னஞ்சிறிய குழந்தைகள் (0-6வயது), சிறிய நட்சத்திரங்கள் (7-12வயது), இளம் மனிதர்கள் (13-17வயது.) என வயது வாரியாக சிறுவர்கள் மூன்று குழுக்களாக பிரிக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொரு குழுவிலும் இருந்த விசுவாசமான தொண்டூழியர்கள், சிறுவர்களுக்கு ஒழுக்கப் பண்புகளை ஏற்படுத்துவதுடன் சகஜ மார்கத்தைப் புரிந்து கொள்ள உதவும் வகையிலான செயல்களை செய்ய வைத்தனர். சிறுவர்களது திறமை வெளிப்படும்படி ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.



# மணப்பாக்கம் செய்திகள்

**2013, டிசம்பர் 2லிருந்து 14 வரை**

**ப்ரிபெக்ட்கள் கருத்தரங்கு:** ஏற்கனவே முந்திய எக்கோஸ் இதழ்களில் கூறியபடி, சுமார் 20 பேரடங்கிய குழுக்கள், பிரசெப்டர்களாக தகுதி பெற பயிற்சி பெறும் விதமாக மணப்பாக்கம் ஆசிரமத்திற்கு அழைக்கப்பட்டனர். தினமும் காலை, அவர்களுக்கு மாஸ்டர் சிட்டிங் கொடுப்பார். ஓரிரு முறை அவர்களிடம் பேசியதுடன், ஒரு முறை அவர்களைத் தனித்தனியே அழைத்தும் பேசினார். அவர்களுக்கு கடைசி சிட்டிங்குகளை நான்கு நாட்களாக பரப்பி கொடுக்கும் படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், வெள்ளிக்கிழமை, டிசம்பர் 6ம் தேதியன்றே, மாஸ்டர் ஒவ்வொருவருக்கும் கடைசி சிட்டிங்கை அளித்தார். சிட்டிங்குகளுக்குப்பின், ஒவ்வொருவருக்கும் சான்றிதழ் வழங்கிய பின்னர், அவர் முகத்தில் ஒரு விதமான திருப்தியைக் காண முடிந்தது.

**ஞாயிறு, டிசம்பர் 15, 2013:** சகோ.கம்லேஷ் ஞாயிறு சத்சங்கம் நடத்தியபின் ஒரு சிறிய உரை வழங்கினார். அவர் பேசுகையில், மாஸ்டர் அப்யாசிகளின் பால் கொண்டிருக்கும் அன்பு எதிர்பார்ப்பற்றது என்றும், ஆனால் நம் அன்பு எதிர்பார்ப்பு கொண்ட ஒன்றாகுமெனக் குறிப்பிட்டார்.

**உறக்க கலை வல்லுனர்:** அமெரிக்காவிலிருந்து வந்திருந்த உறக்ககலை வல்லுனர் ஒருவருடன் மாஸ்டர் அரை மணி நேரம் அளவளாவிக்கொண்டிருந்தார். அவரின் பணி மீது மாஸ்டர் ஆர்வம் காட்டினார். அவ்வல்லுனர், எவ்விதம் பல உடற்குறைபாடுகள் தூக்கமின்மைக்கு காரணமாக அமைகிறது என்பதை பற்றி விவரித்தார். பின் அவர் மாஸ்டரை தினமும் ஒரு இளநீர் பருகும் படி கேட்டுக்கொண்டார். அதற்கு மாஸ்டர் எனக்கு இளநீர் பிடிக்கும்; எது எனக்கு பிடிக்குமோ அதை பரிந்துரை செய்யும் டாக்டர்களையும் பிடிக்குமென கூறிய பொழுது, அறையிலிருந்த அனைவரும் சிரித்தனர்.

**ஸ்ரீ லங்கா:** டிசம்பர் மத்தியில், கருத்தரங்கில் கலந்து கொள்ள மணப்பாக்கத்திற்கு வந்திருந்த ஸ்ரீலங்காவைச்சேர்ந்த சுமார் 60 அப்யாசிகள் மாஸ்டரை சந்தித்து, ஸ்ரீலங்காவில் சென்டர்கள் வளர்ச்சி பெறுவதால் இன்னும் பல பிரசெப்டர்கள் தேவைப்படுவதாக கூறினர். மாஸ்டர் அதைக்கேட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்.

**சூரிய ஒளி அமர்வுகள் :** மாஸ்டர், சூரிய ஒளியின் பயனைப் பெற, வழக்கமாக காட்டேஜுன் முன்புறமோ, சில சமயம் பின்புறமோ வந்தமர்கிறார். இவ்வமர்வுகள் சில சமயம் விவாதங்களுடனோ அல்லது, சில சமயம் மௌன அமர்வுகளாகவோ இருக்கும். அதைக் குறிப்பிட்டுக் கூறிய மாஸ்டர், 'எனக்கும் மக்களின் அருகாமை தேவைப்படுகிறது, அது சூரிய ஒளி மட்டுமில்லை, சூரிய ஒளி, இதயங்கள், அவற்றின் ஈடுபாடு முதலியன கலந்த கலவை" என்றார்.

மாஸ்டருக்கு 22ம் தேதியன்று தோல் ஒட்டு அறுவை சிகிச்சை நடைபெற்றது. அது குணமாக சில நாட்கள் ஆனது.

**கிறிஸ்துமஸ்:** புதன்கிழமை, டிசம்பர் 25, 2013: மாஸ்டர் வெகு சீக்கிரமாகவே எழுந்து காலை 7 மணிக்கு முன்பே தயாராகிவிட்டார். அவர் முழு புத்துணர்வுடனும், மகிழ்ச்சியாகவும், இயல்பாகவும் காணப்பட்டார். தன்னை சுற்றியிருந்த அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை கூறினார். முன்னதாக அவர் தியான கூடத்திற்கு சென்று சத்சங்கம் வழங்க திட்டமிட்டிருந்தார். ஆனால், அவருடைய மருத்துவரின் ஆலோசனையின் பேரில் அறையிலேயே தங்கினார். மாஸ்டர் காலை சிற்றுண்டியை முடித்தவுடன், வரவேற்பறையில் கூடியிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட அப்யாசிகளுக்கு சத்சங்கம் வழங்கினார். பிறகு, அவர் அனைவரையும் வாழ்த்தி, கவனித்தல், அதன் பொருள் மீது தியானம் செய்தல் மற்றும் என்ன கற்றுக்கொண்டோமோ அதனை உள்வாங்குதல் குறித்து பேசினார். இல்லையென்றால் நாம் கல்வி கற்றவர்களாகத்தான் இருப்போம், புரிந்துகொள்பவர்களாக இருப்பதில்லை என்று கூறினார். அது, நீண்ட, ஒரு மணி நேர சத்சங்கமாகவும், அதனைத் தொடர்ந்த உரை 45 நிமிடங்களுக்கும் நீடித்தது.





## ஜனவரி 2014

ஜனவரி 8 அன்று மாஸ்டர், சகோ. கமலேஷின் புதிய வீட்டிற்கு சென்றார். அவர் அங்கு சென்றபொழுது, அப்யாசிகள் வழி முழுவதும் வரிசையாக நின்றிருந்தனர். மாஸ்டர் ரிப்பன் வெட்டி, உள்ளே சென்று, பிரசாதம் வழங்கினார். சகோ. கமலேஷ் மாஸ்டரை வீடு முழுவதும் அழைத்துச் சென்றார். பின்னர், மாஸ்டர் சத்சங்கம் வழங்கினார். சத்சங்கம் தொடங்கி ஏறக்குறைய 35 நிமிடங்களுக்குப் பின், ஒரு செல்போன் ஒலித்து, அனைவரையும் தொந்தரவு செய்ததால், மாஸ்டர் விரைவிலேயே சத்சங்கத்தை முடித்து விட்டார். அவர் வருத்தமடைந்து, ஒரு கண்டிப்பான உரை வழங்கினார். பின்னர் படுக்கையறையில் மாஸ்டர், "சிட்டிங் மிகச் சிறப்பாக இருந்தது. ஆனால், செல்போன் ஒலித்து, தொந்தரவு செய்ததால், சிட்டிங்கை நிறுத்தும்படியாகி விட்டது" என்றார்.

continued..




மாஸ்டர் அங்கு தங்குவதாகத் திட்டம் இல்லாத போதிலும், தனது மனதை மாற்றிக் கொண்டு, அங்கு சில நாட்கள் தங்க முடிவு செய்தார். வீட்டில் சூட்சுமமான, ஆன்மீக நிலையை வைத்திருக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்தி, அதுதான் மாஸ்டரை அங்கே வைத்திருக்கும் எனக் கூறினார். அங்கிருந்தபொழுது ஈரான், பித்தோகர் மற்றும் இன்னும் பல இடங்களில் இருந்து வந்திருந்த சில அப்யாசி குழுக்களை மாஸ்டர் சந்தித்தார். ஒரு நாள் மாலையில் மாஸ்டர், நூற்றுக்கும் மேற்பட்ட அப்யாசிகள் சூழ வரவேற்பறையில் அமர்ந்திருந்த, அந்த அருமையான நேரத்தில் அனைவரிடமும் கலந்துரையாடினார்.

**ஜனவரி 14, 2014 பொங்கல்**

மாஸ்டர் முன்னதாகவே தயாராகி தன்னுடைய அறையிலிருந்த சிலருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தார். மாஸ்டர் பொறுமையாக, வரிசையாக நின்று கொண்டிருந்த அப்யாசிகளுக்கு வாழ்த்துக்களை கூறி, அவர்களை கடந்து தியான கூடத்திற்கு சென்றார். சத்சங்கத்திற்குப் பின்னர், பஜன் பாடப்பட்டது. சத்சங்கம் முடிந்தபிறகு மாஸ்டர் களைப்புற்று இருந்த போதிலும், காட்டேஜில் இருந்து வெளியில் வந்து சூரிய ஒளியில் அமர்ந்து கொண்டார். பிதோகரிலிருந்து வந்திருந்த சுமார் 150 அப்யாசிகளும் உள்ளே செல்ல அனுமதி அளிக்கப்பட்டது. ஒமேகா பள்ளியிலிருந்து வந்திருந்த சுமார் 25 விடுதி மாணவர்களும் உள்ளே வந்து மாஸ்டரை சந்தித்தனர். மாஸ்டர் அமர்ந்திருந்த அந்த தருணத்தில், சகோ. கிருஷ்ணா மற்றும் சகோ.கம்லேஷ் அவர்களுடன், திருவள்ளுவர் ஆசிரமத்தில் கட்டவிருக்கிற காட்டேஜ் வரைபடங்களின் மாதிரிகளைப் பார்வையிட்டு சிறிது நேரம் அதை குறித்து கலந்துரையாடினார்.





**ஜனவரி 15 - புதன்கிழமை - திருவள்ளூரில் மாஸ்டர் குடில் பூமி பூஜை**

காலை தியானத்திற்குப் பின், மாஸ்டரின் உடல் நலம் சற்றுக் குறைவுற்றதால், மருத்துவர் கூறியபடி, தனது









திருவள்ளூர் பயணத்தைக் கைவிட முடிவு செய்தார். அவர் சகோ.கமலேஷிடம், சத்சங்கத்தையும், பூமி பூஜையையும் நடத்துமாறு கேட்டுக் கொண்டார். சகோ.கிருஷ்ணாவும், சகோ.கம்லேஷும், திருவள்ளூரில் இருந்து வந்து, அங்கு எல்லாம் நன்றாக நடந்ததாகவும், சுமார் 1500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாகவும், மாஸ்டரிடம் தெரிவித்தனர்.

**அவருடைய உடல்நிலை**

இம்மாதத்தின் நடுவில், ஜலதோஷம் மற்றும் இருமலினால் மாஸ்டர் பாதிக்கப்பட்டதால், "நான் உடல்நலக் குறைவில் இருக்கும் பொழுது மக்களைப் பார்க்காமல் இருப்பது நல்லது. அவர்களும் என்னிடமிருந்து பாதிக்கப்படுவார்களோ என்று கவலைப்படுகிறேன்" என்று மாஸ்டர் கூறினார். அவர் இசையைக் கேட்டதுடன், புத்தகங்களையும் வாசிக்கக் கூறிக் கேட்டார்.

**சர்வதேச ஸ்காலர்ஷிப் பயிற்சி நிகழ்ச்சி - ஜனவரி 18 முதல் 24 வரை**

பிரிபெக்ட்களை தயார்செய்யும் மாஸ்டரது செயலானது, அவர் உடல் நலமின்றி இருந்தாலும் கூட, ஒரு மாரத்தான் ஓட்டத்தைப் போன்று நீண்டிருந்தது. ஞாயிறு அன்று, ஸ்காலர்ஷிப் பயிற்சிக்கு வந்தவர்களை மாஸ்டர் சந்தித்து, ஒரு சிட்டிங் கொடுத்தார். அதன்பிறகு, பிரிபெக்டுக்களாக ஆக்கப்படவிருக்கும் சுமார் முப்பது அப்யாசிகளை, அதற்குத் தயார் செய்யும் வேலையை பிரிபெக்ட்களிடம் பகிர்ந்து கொடுத்தார். வார ஆரம்பத்தில் மாஸ்டர் மிகவும் உடல்நலம் குன்றிக் காணப்பட்டாலும், அவரால் இவ்வேலையை வெள்ளிக்கிழமைக்குள் முடிக்க முடிந்தது. கடைசி சிட்டிங்கிற்குப் பிறகு, அவர் புதிய பிரிபெக்ட்கள் அனைவரையும் தனித்தனியாக சந்தித்து, அவர்களுக்கு பிரசாதம் மற்றும் பிரிபெக்ட் சான்றிதழ்களை வழங்கினார்.

"வேலையில் இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காக, சிட்டிங் முழுவதும் எனது இருமலை அடக்கி வைத்திருந்தேன்" என்று அவர் கூறினார்.

**2014 ஜனவரி 26 - ஞாயிற்றுக்கிழமை**

சகோ.சமஸ்கிருத கண்ணன் அவர்களுடைய கீதைச் சொற்பொழிவை கேட்டதுடன், நல்ல உற்சாகமான மன நிலையில் இருந்தார். மாலையில் சத்சங்கம் நடைபெற்ற சமயத்தில் ஆசிரமத்தை சுற்றி வரச் சென்றார். மேலும், மாலை சுமார் 5.45 மணியளவில் ஆப்பிரிக்காவில் இருந்து வந்திருந்த அப்யாசிகளை காட்டேஜில் வெளிப்புறத்தில் அவர் சந்தித்து, காட்டேஜின் முன்புறத்தில் அவர்களுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

**2014 ஜனவரி 31- சீனப் புத்தாண்டு**

மாஸ்டர் மிகவும் சீக்கிரமாகவே எழுந்துகொண்டார். அவர் வெளியில் அமர்ந்த போது, நல்ல உடல் நலத்துடன், மிகுந்த உற்சாகமாகவும், மகிழ்ச்சியுடனும் காணப்பட்டார். அப்போது சீன அப்யாசிகள் வந்து மாஸ்டருக்கு சில பொருட்களை வழங்கிய போது, அவர்களிடம் புத்தாண்டு வாழ்த்துக்களை சீன மொழியில் கூறி வாழ்த்தினார்.

திருப்பூர் செல்வதற்காக, 3 பேருந்துகள் புறப்படத் தயாராக இருந்தன. மாஸ்டர், பயணப் பொறுப்பாளரைச் சந்தித்து, பேருந்துகள் எவ்வாறு ஒன்றன்பின் ஒன்றாகப் பின்தொடர்ந்து செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

காலை உணவிற்குப் பிறகு, மாஸ்டர் கனடா அப்யாசிகளை காட்டேஜின் முற்றத்தில் சந்தித்தார். இப்பொழுது அவர்களுக்கு ஒரு புது ஆசிரமம் கிடைத்திருப்பதனைக் கொண்டாடும் விதமாக அவர்கள் ஒரு கேக் வெட்டினர். மாஸ்டர் அனைவரையும் வாழ்த்தி, எல்லோருடனும் கேக்கைப் பகிர்ந்து கொண்டார்.





## ஓஷியானியா கருத்தரங்கம்

**7-12 ஜனவரி 2014 BMA, மணப்பாக்கம்**

ஜனவரி 7 ம் தேதி முதல் 12 தேதி வரையில் ஓஷியானியா மையங்களான ஆஸ்திரேலியா, பிஜி, புதிய கலிடோனியா மற்றும் நியூஸிலாந்து ஆகியவற்றைச் சேர்ந்தோர், மணப்பாக்கத்தில் குழுமியிருந்தனர். பிரிபெக்டுகளுக்குரிய செமினார் ஜனவரி 4ம் தேதி முதல் 6 ம் தேதி வரை இருந்தது. ஜனவரி 4ம் தேதி மாஸ்டர் உடல் நிலை சரியில்லாத போதும், சுமார் 40 ப்ரிபெக்டுகளுக்கு சத்சங்கம் நடத்திய பின்னர் அவர் பேசிய பேச்சு, எல்லோரையும் நெகிழச் செய்தது. அதன் பிறகு அவர்களுடன் முற்றத்திலேயே சுமார் ஒரு மணி நேரத்தை செலவிட்டார். பின்னர் கலையரங்கத்தில் நடைபெற்ற பணிமனை நிகழ்ச்சி, பிரிபெக்டுகளுக்கு ஆழ்ந்த கருத்துக்களை உணர்த்துவதாக இருந்தது.

7 ம் தேதி ஆஸ்திரேலியாவிற்கும், நியூஸிலாந்திற்கும், 200 பேர் பங்குபெற்ற ஓஷியானியா செமினார், ஆண்டு பொதுக் கூட்டத்துடன் தொடங்கப்பட்டது. சகோ. கம்லேஷ் கூட்டத்தில் உரையாற்றினார். இந்த செமினாரில், மதிய வேளைகள், தனித்தியானத்திற்கும், சுய பரிசோதனைக்கும், புத்தகங்களை வாங்கவும், நூலகத்தில் செலவிடவும் பயன்படுத்தப்பட்டன. இளம் அப்யாசிகளால் நடத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி, பங்கேற்பாளர்களிடையே ஒரு சுமூக இணைப்பை ஏற்படுத்துவதற்கு மிகவும் உதவியது. மாஸ்டரின் உடல் நிலை காரணமாக அவர் பிண்ணணியில் இருந்தாலும், மாஸ்டரின் அன்பின் இணைப்பை ஆரம்பம் முதலே உணர முடிந்தது. அவரது அன்பு அனைத்து நிகழ்ச்சிகளிலும் வழிகாட்டும் கரமாக இருந்ததும், மாஸ்டரது முழுக்கவனமும் மிகவும் நிலைத்திருந்ததை உணர்த்தியது.

10ம் தேதி மாலை சகோ. கமலேஷ் இளைஞர்களுக்கு உரையாற்றினார். அதில், "அன்றாட வாழ்க்கையில் வழக்கமான செயல்களை எவ்வாறு ஆன்மீக கண்ணோட்டத்துடன் அணுகுவது, உதாரணமாக சாப்பிடும் போது, தூங்கும் போது, மற்றும் பேச்சின் போது" என்பதை பற்றிய அவரது செய்தி தெளிவாக இருந்தது.

11 ம் தேதி மாலை, உடல் நலம் இல்லாத போதும், மாஸ்டர் காட்டேஜின் முற்றத்தில் அப்யாசிகளைச் சந்தித்து நன்னடத்தையைப் பற்றி பேசிவிட்டு, தொடர்ந்து மிக ஆழ்ந்த சத்சங்கத்தை அளித்தார். நியூஸிலாந்திலிருந்து வந்த சகோதரி கள் மயோரியில் ஒரு பாடலைப் பாடினார்கள். அதன் பிறகு மாஸ்டர் தன் அறைக்கு ஓய்வெடுக்க திரும்பினார். மாஸ்டர் அளித்த ஞாயிற்றுக்கிழமை சத்சங்கம் மிகவும் அற்புதமான ஓர் நிறைவாக இருந்தது. சகோ. கமலேஷ் அளித்த இறுதிக்கட்ட உரையின் சிறப்பு அம்சங்களாக உள்நிலையை தக்க வைத்துக் கொள்வதன் முக்கியத்துவத்துவம் மற்றும், அன்றாட வாழ்வில் நேரத்தை பயனுள்ள வகையில் உபயோகப்படுத்துவதை பற்றியும் இருந்தது.



## ஆப்பிரிக்க கருத்தரங்கம்

**மணப்பாக்கம் - ஜனவரி 2014**



*"நீங்கள் என்னுடன் இங்கே இருந்தாலும் இல்லையென்றாலும், நான் உங்கள் அனைவருடனும் இருக்கிறேன், அதை நம்புங்கள்".*

ஆப்பிரிக்க கருத்தரங்கத்திற்கு, போட்ஸ்வானா, கேமரூன், எகிப்து, கென்யா, மடகாஸ்கர், மொரீஷியஸ், மொராக்கோ, ரேனியன், தென் ஆப்பிரிக்கா, தான்சானியா மற்றும் உகாண்டா நாடுகளைச் சேர்ந்த 163 பங்கேற்பாளர்கள் ஜனவரி 20 ம் தேதிக்குள் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு தினமும் காலை 6.30, 9.00 மற்றும் மாலை 5.00 மணிக்கு கூட்டுத்தியானங்களும், பிற்பகலில் தனித் தியானங்களும் இருந்தன. கூடுதலாக, உரைகள், வீடியோ காட்சிகள், (பூஜ்ய மாஸ்டரின் உரைகள்), அப்யாசி, பயிற்சியாளர்கள் மற்றும் ப்ரிபெக்ட்கள் பணி முகாம், மற்றும் மாஸ்டருடன் சந்திப்பு ஆகியவையும் இருந்தன.

சகோ. ராஜேஷ் ராதோட், சகோ. கம்லேஷ் ஆகியோர், பங்கேற்பாளர்களுக்கு உரையாற்றினர். இந்த உரைகள் பல விளக்கங்களையும், பாதையில் முன்னேறிச்செல்ல வழிகாட்டுதல்களையும் வழங்குவதாக இருந்தன.

அப்யாசிகள், ISAW குழுவிற்கு மாஸ்டர் முந்தைய தினம் வழங்கிய உரையை பார்த்தனர். அதில் மாஸ்டர் ஒவ்வொருவரும் மெழுகுவர்த்திக்கு ஒளியேற்றும் தீக்குச்சிகளாக மாற வேண்டும் என்றும் நமது செயல்கள் மற்றும் நடத்தையில் மாற்றம் கொண்டு வருவதன் மூலமே மற்றவர்களிடம் மாற்றத்தை நாம் காண முடியும் என்றும் கூறினார்.

பங்கேற்பாளர்களிடையே ஒற்றுமையுணர்வையும் கலந்துரையாடலையும் கொணரும் நோக்கத்தோடு சிறு குழுக்கள் அமைக்கப்பட்டது. சுய அறிமுகத்திற்கு பிறகு ஒவ்வொரு பங்கேற்பாளரும், தங்களைப் பற்றிய மூன்று எளிய கேள்விகளுக்கு விடையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். மனித அளவில் இந்த பயிற்சி யானது உணர்வுப் பூர்வமாகவும் உள்ளம் கவரும் வகையிலும் இருந்தது. கண்ணீர் மற்றும் மகிழ்ச்சி நிரம்பி, ஒருவரை ஒருவர் நன்றாக தெரிந்து கொண்டு, அந்த ஆப்பிரிக்க சகோதர சகோதரிகளிடையே நெருக்கம் அதிகரித்திருந்ததும் புலப்பட்டது.

புதிய அப்யாசிகள் முதல் நாள் மாஸ்டருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். மாஸ்டர் மற்றொரு நாள் இக்குழுவிற்காக சத்சங்கம் நடத்தினார். ஜனவரி 26 ஞாயிற்றுக்கிழமையன்று , மாலை சத்சங்கத்திற்கு பிறகு மாஸ்டரை சந்திக்க அழைக்கப்பட்டிருந்தனர். இந்த சந்திப்பின் போது மாஸ்டர் அவர்களின் சில பயங்களையும் கவலைகளையும் தெளிவு படுத்தினார்.

## லாலாஜி மகராஜின் பிறந்த நாள் விழா கொண்டாட்டங்கள்- இந்தியா


ஜோத்பூர்


மும்பை


ல்வாரா


கொல்கத்தா


ஒஸ்மனாபாத்


லக்னௌ


ஹுப்ளி


சிக்கலி


வாரங்காவ்


குல்பர்கா

## அனைத்து இந்திய கட்டுரை எழுதும் நிகழ்ச்சி 2013


இது, ஒவ்வொரு வருடமும் சர்வதேச இளைஞர் தினத்தின் நினைவாக SRCM மற்றும், இந்தியா மற்றும் பூட்டானிற்கான ஐக்கிய நாடுகள் தகவல் மையம் (UNIC) ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படுகிறது. அனைத்து இந்திய கட்டுரை எழுதும் நிகழ்ச்சி 2013, இவ்விரு நிறுவனங்களின் 9ம் ஆண்டு கூட்டுப்பங்காண்மையை குறித்தது. 9 முதல் 12-ம் வகுப்பு வரை உள்ளடக்கிய முதல் வகையினருக்கான தலைப்பு, ஒமேகா பள்ளி மாணவர்களுக்காக மாஸ்டர் ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்ட "இதயங்கள் திறக்கும்போது மட்டுமே மனங்கள் திறக்கின்றன" என்ற மேற்கோள் ஆகும். இளநிலை மற்றும் முதுநிலை பட்டப்படிப்பை உள்ளடக்கிய இரண்டாம் வகையினருக்கான தலைப்பு, ஹென்றி டேவிட் தொரேயின், எண்ணத்தைத் தூண்டும் வாக்கியமான "நீங்கள் என்ன பார்க்கிறீர்கள் என்பது முக்கியமல்ல, என்ன பார்த்தறிகிறீர்கள் என்பதுதான் முக்கியம்" என்பதாகும். பங்கேற்பாளர்கள், தங்கள் தலைப்பைப் பற்றி தாராளமாக கலந்துரையாடி, ஆய்வு செய்யலாம்


சிவகங்கை


பெவார்


பெல்லாரி


கொல்கத்தா



ராஞ்சி

என்றாலும், அதன் பொருளைப்பற்றி அகத்தாய்வு செய்து, தாங்கள் சுயமாக புரிந்துகொண்டதையே எழுத வேண்டும். இந்த வருடம், 12,193 கல்வி நிறுவனங்களிலிருந்து 1,78,589 மாணவர்கள் கலந்துகொண்டனர். முதல் வகையினருக்கான முதல் பரிசை ரூர்க்கேலாவிலுள்ள (மண்டலம் 14, ஒரிசா) டாக்டர் A.N. கோஸ்லா டாவ் பொதுப் பள்ளியைச் சேர்ந்த ஹர்ஷிதா சாரி வென்றார். இரண்டாம் வகையினருக்கான முதல் பரிசை ஜெய்ப்பூரிலுள்ள (மண்டலம் 7 ராஜஸ்தான்) ஜெய்ப்பூரியா மேலாண்மை நிறுவனத்தைச் சேர்ந்த அங்கூர் சக்ரவர்த்தி


ஔரங்கபாத்

வென்றார். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு விருது மற்றும் UNIC இயக்குனரும் SRCM தலைவரும் இணைந்து கையெழுத்திட்ட ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டன. இவ்விரு முதல் பரிசுகளை வென்ற இக்கட்டுரைகள் SRCM வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியைப் பற்றிய அறிக்கைகள், தென் தமிழகம் (பரமக்குடி, கோவில்பட்டி, திருப்பூர், கோபிச்செட்டிபாளையம், சிவகங்கை), மகாராஷ்டிரம் (சிக்கலி, அஹமத் நகர், மும்பை, ஒஸ்மனாபாத், பூனே, பைத்தன், ஔரங்கபாத்) உத்தரப்பிரதேசம், (பரேலி, ஹர்தோய், மீரட், மொரதாபாத், லக்னௌ, ஷாஜஹான்பூர்), வட கர்நாடகம் (குல்பர்கா, ஹுப்ளி, பஸவகல்யாண், பெல்லாரி, பெல்காம்), கேரளம் (அலுவா, பாலக்காடு), ராஞ்சி, டெல்லி, மேற்கு வங்கம் (சிலிகுரி, கரக்பூர், ராணிகஞ்ஜ், கொல்கத்தா), ராஜஸ்தான் (பீவர், பாலி), ஆந்திர பிரதேசம் (கர்னூல்) மற்றும் பஞ்சாப் (ஜலந்தர்) ஆகிய மாநிலங்களிலுள்ள மையங்களிலிருந்து வந்திருக்கின்றன.


ராணிகஞ்ஜ்


கோவில்பட்டி


மொரதாபாத்


பஹேரி


பைத்தன்


பாலக்காடு


பூனே


சிரோ


சிலிகுரி

## குழந்தைகள் நிகழ்ச்சிகள்






### புல்கான் ஆசிரமம், மகாராஷ்ட்ரா

2013 டிசம்பர் 25 அன்று 140 குழந்தைகளுக்காக நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஒரு அப்யாசி சான்டா கிலாஸ் வேடம் அணிந்து குழந்தைகளை வரவேற்றார். மாஸ்டருடன் ஒமேகா பள்ளி குழந்தைகள் இருக்கும் வீடியோ காண்பிக்கப்பட்டது. குழந்தைகள் விளையாட்டுகளிலும், (creative) உருவாக்கும் செயல்பாடுகளிலும் கலந்து கொண்டனர். நற்குணங்கள் உருவாவதற்கும், நன்னெறி வாழ்க்கைக்கும் தேவையான குறிக்கோள்களை மனதில் பதியவைக்க இவை உதவின. பெற்றோர்களுக்கு வரவேற்பு கூடம் இருந்தது. மாடியில் தோட்டம் அமைப்பது குறித்த செயல் முறை விளக்கத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. குழந்தைகள் ஒளிவீசுகின்ற முகங்களுடனும் விரைவில் அடுத்த நிகழ்ச்சிக்கு வரவேண்டும் என்ற ஆவலுடனும் திரும்பிச் சென்றனர்.

### லூதியானா ஆசிரமம், பஞ்சாப்

ஜனவரி 5ம் தேதி 22 குழந்தைகள் தோட்டக்கலை பயிற்சியில் கலந்து கொண்டனர். குழந்தைகள் 3 குழுக்களாக பிரிக்கப்பட்டு, கிருமி நாசினி, பூச்சி மருந்து மற்றும் இரசாயன உரம் ஆகியவற்றினை பயன் படுத்தி வியாபார நோக்கத்துடன் வளர்க்கப்படும் தாவரங்களால் உடல் நலம் சீர்கெடுவது குறித்து விளக்கப்பட்டது. அவர்கள் மண்ணை சட்டிகளில் நிரப்பி அதில் விதைகளை விதைத்து, நாற்றுகளை நட்டனர். கற்றலின் இயல்பு பற்றிய ஒரு செயல்பாடு, அவர்களின் பல வகை திறன்கள் வளர உதவியது. ஐந்து Rs (Refuse, Recycle, Recharge, Reuse, Reduce) மறுத்தல், மறு சுழற்சி, புதுப்பித்தல், மீண்டும் உபயோகித்தல், சுருக்குதல் ஆகிய கருத்துக்களை உள் அடக்கி "பசுமை எதற்கு?" என்ற தலைப்பில் நடத்தப்பட்ட எழுத்துப் பயிற்சி அவர்களின் எண்ணங்களை வெளிப்படுத்த ஊக்கம் அளித்தது.

### ஜபல்பூர் ஆசிரமம், மத்தியபிரதேசம்

2013 டிசம்பர் 22 முதல் 25 வரையிலான ஒரு குளிர் கால முகாமில் 65 குழந்தைகள் கலந்து கொண்டனர். நன்னெறி கல்வியினை ஆன்மீக சூழலில் கற்பிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டு இருந்தன. இந்த செயல்பாட்டினை அர்ப்பணிப்பு மனம் கொண்ட தன்னார்வ தொண்டர்களின் குழு திட்டமிட்டு முன்னின்று நடத்தியது. இதில் உடல் பயிற்சி, விளையாட்டு, தோட்டக்கலை, ஓவியம் மற்றும் கைத்திறன், கேள்வி பதில், நன்நெறி கதைகள், தன்னார்வ தொண்டர்களின் கருத்துமிக்க படைப்புக்கள், உணர்வுமிக்க திரைப்படங்கள், குழந்தைகள் வழங்கிய கலை நிகழ்ச்சிகள் ஆகியவை இருந்தன. குழந்தைகளுக்கு உடல் நல பரிசோதனை செய்யப்பட்டது.

### கொல்கத்தா, மேற்கு வங்கம்

கொல்கத்தா BMA ஆசிரமத்தில் 2013 டிசம்பர் 29ம் தேதி 10வது ஆண்டு நிறைவு நாள் கொண்டாடப்பட்டது. அது சமயம் அரைநாள் விளையாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. தோட்டத்தில் குழந்தைகள் நடத்திய நடனத்துடன் நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டது. அனைத்து வயதினரும் கலந்து கொள்ளும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. குழந்தைகளுக்கான தடை ஓட்டம், மூன்றுகால் ஓட்டம், இசை நாற்காலி ஆகியவை அனைவரையும் கவர்ந்தது. பத்து நியமனங்கள் பற்றி நடத்தப்பட்ட விளையாட்டு அனைத்து அப்யாசிகளையும் கவர்ந்து அவர்களை அதில் பங்கு கொள்ள வைத்தது. பரிசுகள் விநியோகித்ததைத் தொடர்ந்து மதிய உணவுடன் நிகழ்ச்சி முடிவுபெற்றது.










## இளைஞர் நிகழ்ச்சிகள்

### இளைஞர் சந்திப்பு, அலுவா, கேரளா

பிப்ரவரி 15 மற்றும் 16-ம் தேதிகளில், வலியபரம்பு, கொடுங்கல்லூர், எர்ணாகுளம், அம்பல்லூர், காலடி, திருச்சூர், புலானி மற்றும் அலுவாவிலிருந்து வந்திருந்த இளைஞர்கள் மண்டல ஆசிரமத்தில் சந்தித்தனர். இந்நிகழ்ச்சி, இதுபோன்ற சந்திப்புகளிலிருந்து இளைஞர்கள் எதிர்பார்ப்பதை கண்டறிவதற்கானதாகும். குழு கலந்துரையாடல்கள் மற்றும் உரையாடல்களின்போது, பயிற்சியை வழக்கமுறையாக செய்வதிலும், அதன் மூலம் மற்ற இளைஞர்களை பயிற்சிமுறைக்கு ஈர்ப்பதிலும் எவ்வாறு இளைஞர்களை உற்சாகப்படுத்துவது, சகஜ மார்க்கத்தின் பல்வேறு அம்சங்கள், மற்றும் இன்ன பிற இதுபோன்ற குறிப்புகளைப் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. மதியம், 'இதயத்திலிருந்து கவனித்தல்' என்ற தலைப்பின் மீதான மாஸ்டரின் உரையைக் கேட்ட பின்னர் ஒரு கேள்வி பதில் பகுதி நடத்தப்பட்டது. சகோ. மோகன் (ZIC) அவர்கள், தனது உரையில், எவ்வாறு தியானம் மற்றும் சகஜ மார்க்க பயிற்சி ஆகியன 'ஆத்ம தர்ம'த்தை ஒத்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டுவிட்டு, காலையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது எழுந்த வெவ்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து தெளிவுபடுத்தினார்.

### மண்டல இளைஞர் கருத்தரங்கம், குவஹாத்தி, அசாம்

ஜனவரி 11 மற்றும் 12-ம் தேதிகளில், குவஹாத்தி ஆசிரமத்தில் 'உருமாறுதல்' (Transformation) பற்றிய இரண்டு நாள் தங்குமுறை கருத்தரங்கம் ஒன்று நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கத்தில் அசாம், நாகாலாந்து, மணிப்பூர் மற்றும் மேகாலயாவிலிருந்து வந்திருந்த 52 அப்யாசிகள் கலந்துகொண்டனர். முதுநிலை அப்யாசிகள் ஆற்றிய உரைகள், குழு கலந்துரையாடல்கள், அகத்தாய்வுகள் மற்றும் கேள்விபதில் பகுதிகள், சகஜ மார்க்கத்தைப் பற்றி மேலும் அதிகமாக அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பை அளித்தன. கருத்தரங்கின் முடிவில் பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவங்களை தங்கள் நாட்குறிப்பில் எழுத ஊக்குவிக்கப்பட்டனர். ஒருவரின் வாழ்வில் ஒரு தகுதி வாய்ந்த மாஸ்டரின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் குறும்படம் ஒன்று காண்பிக்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் மேலும் இதுபோன்ற கருத்தரங்குகள் மற்றும் CREST நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஆர்வமாய் இருந்தனர்.

### வதோதரா

டிசம்பர் 29, 2013 அன்று வதோதரா இளைஞர்களுக்கு வருடாந்திர ஒருங்கு கூடுதல் ஒன்று நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுமார் 75 இளம் அப்யாசிகள் பங்கேற்றனர். சகோதரி அப்யாசிகளுக்கான 'பணியிடத்தில் தற்காப்பு' என்பதைப் பற்றிய பகுதியுடன், அனைவருக்குமான 'புதையல் வேட்டை' நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. பின்னர், கூடார நெருப்பு(campfire) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; அப்போது அப்யாசிகள், ஓர் அப்யாசி பாடிய பாடலைக் கேட்டு மகிழ்ந்தனர். இந்நிகழ்ச்சி, இரவு 9 மணி பிரார்த்தனையுடன் முடிவுற்றது.

### டெல்லி

2014 ஜனவரியில், R.K. புரம் ஆசிரமத்தில், (10-12 மற்றும் 17 -19) காஸியாபாத், நொய்டா, கூர்காவுன் மற்றும் டெல்லி அப்யாசிகளுக்கு ஒரு தங்குமுறை வார இறுதி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சி, நமது முறை பற்றிய புரிதலை ஆழப்படுத்துவதற்கும், அவர்களின் தனிப்பட்ட பயிற்சிக்கான உற்சாகத்தை உருவாக்கவுவதற்குமானதாக இருந்தது. அகத்தாய்வு செயல்பாடுகள், பகிர்தல் பகுதிகள் மற்றும் குழு கலந்துரையாடல்கள் ஆகியன பயிற்சியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய புரிதலை ஆழப்படுத்தின. அவர்கள், ஆசிரமத்தில் தன்னார்வப் பணியிலும் ஈடுபட்டனர். மாலையில், சிலர் பஜனைகள் பாடினர்; கங்கை உபநிடதத்திலிருந்து ஒரு பகுதி காண்பிக்கப்பட்டது. பங்கேற்பாளர்களின் ஒழுங்குமுறையும், உற்சாகமும், ன்னார்வலர்களின் உள்ளார்ந்தமையும் நெஞ்சைத் தொட்டன.



## இணை செயலாளரின் வடகிழக்குப் பிரதேசத்திற்கான பயணம்

சகோ. A.P.துரை, 2014 ஜனவரி 16-25, அஸ்ஸாம் மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் உள்ள மையங்களுக்குச் சென்றிருந்தார். அவர் கௌஹாத்தியை 16ம் தேதி காலை சென்றடைந்தார். அதற்குப் பின் கௌஹாத்தி ஆசிரமம், டெங்கா பள்ளத்தாக்கு துணை மையம், போம்டிலா நகர்லாகூன், ஜிரொ, பஸிகட், N.லக்கிம்புர், டிப்ருகர் போன்ற இடங்களுக்கு சென்றார். இந்த இடங்களில் அப்யாசிகளிடையே பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்களும், வரவேற்புக் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

சகோ.ஈஸ்வர் பிரஸாத் (மண்டல பொறுப்பாளர்), சகோ.அருண் பதக், சகோ. தானி சந்த் (மண்டல பொறுப்பாளர்), மற்றும் சகோதரி ஜ்யோத்சனா ஆகியோர் அவருடன் சென்றிருந்தனர். இந்தப் பயணத்தின் முக்கிய நோக்கம் அப்யாசிகளையும் பிரிபெக்டுகளையும் மாஸ்டரை நோக்கிக் கொண்டு செல்வதுதான் ஆகும். இந்த விஷயம் 19ம் தேதி நடந்த பிரிபெக்டுகளுக்கான கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டது.

பிரிபெக்டுகளின் கூட்டத்தில், அவர்களது தனிப்பட்ட பயிற்சி, மாஸ்டருடனான உறவு முறை ஆகியவை பற்றி வலியுறுத்தப்பட்டது. அவர்கள் எங்கே சென்றாலும் மாஸ்டர் வழி நடத்துவதையும் இந்த குழுவால் உணர முடிந்தது.

## U.Connect நிகழ்ச்சி, ஜெய்பூர், ராஜஸ்தான்



இந்த நிகழ்ச்சியானது சகஜ மார்க்கத்தை பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் அறிமுகப்படுத்துவதன் மூலம் இளைஞர்களிடையே மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு முற்படுகிறது. ஜனவரி 19ம் தேதியன்று நடந்த கூட்டத்தில், இந்நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்ட இடமான, "மாலிபா" என்னும் U Connect வெற்றிக்கதை தன்னார்வலர்களிடையில் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இந்த நிகழ்ச்சியை ஒரு சீரான ஒழுங்குப்பாடான முறையில் நடத்துவதற்கான செயல்முறைகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. ஒரு அப்யாசி இந்த நிகழ்ச்சியை தனது நிறுவனத்தில் செயல்படுத்த முன் வந்தார். இது கல்லூரிகளில் புதிய கல்வியாண்டில் ஜூலை மாதத்தில் அறிமுகப்படுத்துவதற்கு முன்னால் ஒரு சிறந்த கற்றுத் தேறும் அனுபவத்தைக் கொடுக்கும்.

## மண்டல கூட்டம், கொல்கட்டா, மேற்கு வங்கம்

இக்கூட்டம் டிசம்பர் 2013, 21,22 தேதி களில் நடந்தது. பண்டேல், ராணிகஞ், கராக்புர், கிருஷ்ணாநகர், ஆஸன்சோல், சித்தரஞ்சன், பர்ன்புர், கூச்பிஹார், மற்றும் டார்ஜிலிங் ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் 60 அப்யாசிகள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி வங்காள மொழியில் சாதனாவின் பல்வேறு பகுதிகள், பத்து நியமங்களின் முக்கியத்துவம் ஆகியவை பற்றி வலியுறுத்துவதாக இருந்ததுடன், அப்யாசிகளின் பிரச்சினைகள் பற்றிக் கூறவும் உதவியது. வங்காள மொழிபெயர்ப்புக் குழுவிற்கு அவர்களின் பணியைத் திட்டமிடவும் உதவியது. இரண்டு நாட்களிலும், ஆனந்தமும், சகோதரத்துவமும் நிரம்பியிருந்தன. எல்லோரும் புத்துணர்ச்சியுடன் திரும்பிச் சென்றனர்.






## பயிற்சியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சி
### பனவேல் ஆசிரமம், மும்பை

டிசம்பர் மாதம் 12-16 நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் மகாராஷ்டிரா முழுவதிலும் இருந்து 50பேர் கலந்து கொண்டனர். "துணை தந்து ஊக்குதல்" என்பதை தினசரி வாழ்க்கையில் ஒரு கருவியாக பயன்படுத்துவது பற்றி கூறப்பட்டது. "துணை தந்து ஊக்குதல்" மற்றும் "சகோதரத்துவம்" பற்றிய கலந்தாய்வில் ஊக்குவித்தல் கலையை, நேருக்கு நேர் விவாதம் மூலமாகவும், கருத்தூன்றிக் கவனிப்பதன் மூலமும், இதயத்திலிருந்து பேசுவதன் மூலமும் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. GITP கோட்பாடுகளில் நிகழ்த்தப்பட்ட கருத்தாய்வுகள், இது பற்றிய முன்னோடி அனுபவங்களைத் தந்தன. இந்த் நிகழ்ச்சியானது, மாஸ்டரால் அளிக்கப்பட்ட வாய்ப்பினை முழு இதயத்துடன் ஏற்றுக் கொள்ளும்படியான மையப் பொறுப்பாளரின் பணிவான வேண்டுகோளுடன் முடிவடைந்தது.

## சிரோ ஆசிரமம், அருணாச்சல பிரதேசம்

# ஒளி மையம்





சிரோ, அருணாச்சல பிரதேசத்தில் தென் சுபன்சிரி மாவட்டத்தின், மாவட்டத் தலைமையகமாகும். இவ்விடம், நிலப்பரப்பிலிருந்து 5000அடி உயரத்தில் அமைந்துள்ளது. சிரோ, பரந்து விரிந்த குன்றுகளைக் கொண்ட இயற்கையின் அதிசயமான இடமாகும். மாநிலத் தலைநகரான இட்டாநகரிலிருந்து 180கி.மீ தொலைவிலும், அருகிலுள்ள லீலாபரி விமான நிலையத்திலிருந்து 176கி.மீ தொலைவிலும் உள்ளது. அது அஸ்ஸாமிலுள்ள வடக்கு லக்கிம்பூர் அருகிலுள்ளது. இங்கு வானிலை, குளிர் காலத்தில் மிகுந்த குளிராகவும், வெயில் காலத்தில் மிதமாகவும் இருக்கும். சிரோ பீடபூமியின் மக்கள் தொகை 25,000 ஆகும். டோன்யி -போலோ என்றழைக்கப்படும் சூரியன் மற்றும் சந்திரனை கடவுளாக வழிபடும் அபதானி என்னும் மலை வாழ் பழங்குடி மக்கள் இங்கு உள்ளனர்.

அருணாச்சல பிரதேச தோட்ட வேளாண்மைத் துறையில் வேலை பார்க்கும் சகோ.K.N.திவாரி, உத்திரகண்ட்-லிருந்து மாற்றம் காரணமாக சிரோவிற்கு 1985ல் வந்தார். செப்டம்பர் 1986ல், ஒரு நாள் மாலையில், நடந்து செல்லுகையில், அவருக்கு திடீரென தியானத்தில் அமர வேண்டும் என இருந்தது. ஆகவே அங்கு அன்பின் அடையாளமாக, ஆசிரமம் ஒன்றை உருவாக்க அவர் முடிவு செய்தார். 1987ல் குன்றின் மேல் பகுதி முழுவதிலும் வேலி அமைக்கப்பட்டது. பிறகு வேறு வழிபடும் ஸ்தலங்களும் இங்கு வந்தன. பின்னர் சகஜ மார்க்கத் தத்துவங்களை அங்குள்ள வீடுகளுக்கு சென்று எடுத்துரைத்தார். மக்களின் ஆர்வத்தை அறிந்து, 1992 லிருந்து, பிரிபெக்ட்கள்-சகோ.புருஷோத்தம் அகர்வால் (வடக்கு லக்கிம்பூர்), சகோ.ஈச்வர் பிரசாத் அகர்வால் (தின்சுகியா) மற்றும் K.B.சக்ரவர்த்தி (இட்டாநகர்) ஆகியோரை அப்யாசிகளுக்கு அவ்வப்போது உதவுமாறு கேட்டுக் கொண்டார்.

சகோ.திவாரியின் வீட்டில் அப்யாசிகளின் எண்ணிக்கை அதிகரித்ததால், ஆசிரமத்தின் அவசியத்தை அவர்கள் உணர்ந்தனர். முன்பே பரிந்துரைக்கப்பட்ட நிலம், மிஷனிற்கு 12 செப்டம்பர் 1993 அன்று முறையாக வழங்கப்பட்டது. ஆசிரமம் கட்ட அனுமதி வழங்கிய சகோ.ஈச்வர் பிரசாத்தையே, 4 ஜூலை 1994 அன்று அப்பணிக்காக மாஸ்டர் நியமித்தார். குன்று பரப்புகளில் இந்தத் திட்டத்தை முடிப்பது சற்றே கடினமாக இருந்தாலும், அப்யாசிகளின் சீரான அன்பினாலும், மனோபலத்தாலும், ஆசிரமம் கட்டுவது சாத்தியமாயிற்று.

14 செப்டம்பர் 1996 ஆம் நாள், அச்சமயம் மிஷனின் செயலாளராக இருந்த சகோ. S.A.சாரநாத், அவர்களால் ஆசிரமம் திறந்து வைக்கப்பட்டது. அருகிலுள்ள மையங்களிலிருந்து சுமார் எழுபது அப்யாசிகள் துவக்க விழாவில் கலந்து கொண்டனர். ஜூலை 2003 அன்று, U.S.பாஜ்பாய் (செயளாளர் SRCM) ஆசிரமத்தை வந்து பார்வையிட்டார். மந்திர் கமிட்டி முறையாக நிலத்தை மிஷனிற்கு வழங்கியிருந்தாலும், 2000ம் ஆண்டில் அருணாச்சல பிரதேச அரசுக்கு, நிலத்தை மிஷனிற்கு வழங்குமாறு மனு ஒன்று அளிக்கப்பட்டிருந்தது. முடிவாக 1890 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டது.

ஆசிரமத்தின் இரண்டடுக்குக் கட்டிடத்தில், 122சதுர மீட்டர் பரப்புள்ள தரைத் தளம், தங்கும் விடுதியாக பயன்படுத்தப்படுகிறது. அதன் முதல் தளத்தில், 128.38 சதுர மீட்டர் பரப்பளவில் உறங்கும் அறை, விருந்தாளிகள் அறை, உணவருந்தவும், சிட்டிங்கிற்கும் ஒரு அறை, மற்றும் குளியலறை, கழிப்பறை வசதி கொண்ட மாஸ்டரின் அறை மற்றும் சமையலறையும் உள்ளன.




தியான மண்டபம், CGI கூறையுடன், 119 சதுர மீட்டரை பரப்பளவில் அமைந்துள்ளது. சுவர்கள், மூங்கில்கள் ஒன்றாக வைத்து அமைக்கப்பட்ட பெரிய ஷீட்களால் ஆனது. தற்போதைய அப்யாசிகளின் எண்ணிக்கை 80க்கும் மேலாக உள்ளது. ஞாயிறு சத்சங்கத்தில் ஏறக்குறைய 20-25 அப்யாசிகள் பங்கேற்கின்றனர். அருணாச்சல பிரதேசத்தின் தொலைதூரப் பகுதிகளிலும் நம் மிஷனை பரப்புவதில் சிரோ ஆசிரமம் முக்கிய பங்கு வகிக்கிறது.

To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org

© 2014 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. “Shri Ram Chandra Mission", "Sahaj Marg", “SRCM”, “Constant Remembrance” and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.